## பாடம் 2 - எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால் !

**வகுப்பு : IV**

**பாடம் : தமிழ்**

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'பாய்ந்தோடும்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது...................

அ) பாய் + தோடும் **ஆ) பாய்ந்து + ஓடும்**

இ) பயந்து + ஓடும் ஈ) பாய் + ஓடும்

2.காலை + பொழுது - இச்சொற்களைச் சேர்த்து எழுதினால் கிடைப்பது.................

**அ) காலைப்பொழுது** ஆ) காலைபொழுது

இ) காலபொழுது ஈ) காலப்பொழுது

3. பின்வருவனவற்றுள் எது இயற்கை இல்லை?.........................

அ) மலை ஆ) காடு **இ) நெகிழி** ஈ) நிலம்

4. குனிந்து - இச்சொல் குறிக்கும் பொருள்.......................

அ) வியந்து ஆ) விரைந்து இ) துணிந்து **ஈ) வளைந்து**

5.தன் + உடைய இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது.........................................

**அ) தன்னுடைய** ஆ) தன்உடைய இ) தன்னுடைய ஈ) தன்உடையை

### ஆ. வினாக்களுக்கு விடையளிக்க

**1. செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்து நோய்கள் வருகின்றன.

உணவுகள் உயிர்ச்சத்தின்றி இருக்கின்றன.

மண் வளம் அழிக்கப்படுகிறது.

**2.நிலத்தைத் தெய்வமாக வணங்கவேண்டும் எனத் தாத்தா கூறக் காரணம் என்ன?**

நெல், கம்பு, கேழ்வரகு, உளுந்து, துவரம்பருப்பு, எண்ணெய் வித்துகள், காய்கள், பழங்கள் எனப் பலவகையான உணவுப் பொருள்களை நிலம் கொடுப்பதால், நிலத்தைத் தெய்வமாக வணங்க வேண்டும்.

**3. 'எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால்' என இளமாறன் ஏன் கூறினான்?**

இளமாறன் தன் தாத்தா கூறியவற்றைச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய அப்பா "வயலுக்குச் சென்று வந்தாயா? உன் தாத்தாவை வயலுக்குப் போக வேண்டாம் என்று சொன்னால் அவர் எங்கே கேட்கிறார்?" என்று கூறினார்.

அதற்கு இளமாறன் “யாருமே வயலுக்குப் போகவில்லை என்றால் என்னவாகும்?” என்று கேட்டான். “எல்லாரும் இப்படியே இருந்து விட்டால் விவசாயத்தை யார் செய்வது?” என்று கேட்டுத் தன் தந்தையின் தவற்றைச் சுட்டிக் காட்டினான்.

## இ. சொந்த நடையில் கூறுக

### 1. உமக்குப் பிடித்த காய்கள், பழங்கள் எவை? ஏன்?

எனக்குப் பிடித்த காய்கள், பழங்கள் : கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய், பாகற்காய், முள்ளங்கி, காரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு, பீட்ரூட், பூசணிக்காய், எல்லா வகையான கீரைகள், அன்னாசிப்பழம், கொய்யாப்பழம், மாம்பழம், திராட்சைப்பழம், பப்பாளிப்பழம் ஆகிய அனைத்தும் எனக்குப் பிடித்தவை.

இவற்றை உண்பதற்கான தனித்தனிக் காரணங்கள் ஏதும் இல்லை. காய்கறிகளிலும் பழங்களிலும் தனித்தனி மருத்துவக்குணம் உள்ளது.

பொதுவாகக் காய்கறிகளையும் பழங்களையும் உண்பதால் நம் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து கிடைக்கிறது. உயிர்ச்சத்து மற்றும் தாது உப்புகள் கிடைக்கும். நோய் எதிர்ப்புச் சக்தி கூடுகிறது. அதனால் நோயற்ற வாழ்வு வாழ இயலும்.

## ஈ. அகரமுதலிப் பார்த்துப் பொருளறிக

மாசு - அழுக்கு, குற்றம், மாறுபாடு

வேளாண்மை - உழவு

## உ. சொற்களை இணைத்துத் தொடரை நீடித்து எழுதுக.

| படித்தேன் | வரைந்தாள் |
|---|---|
| நான் படித்தேன் | கமலா வரைந்தாள் |
| நான் நேற்று படித்தேன் | கமலா படம் வரைந்தாள் |
| நான் நேற்று பாடம் படித்தேன் | கமலா முருகன் படம் வரைந்தாள் |
| நான் நேற்று தமிழ்ப்பாடம் படித்தேன் | கமலா அழகாக முருகன் படம் வரைந்தாள் |

## ஊ. நிறுத்தக் குறியிடுக

### 1. நெல் கம்பு கேழ்வரகு போன்றவை தானியங்கள்

நெல், கம்பு, கேழ்வரகு போன்றவை தானியங்கள்.

2. வெண்டைக்காய் உடலுக்கு நல்லது

‘வெண்டைக்காய் உடலுக்கு நல்லது.

3. ஆகா பயிர் அழகாக உள்ளதே

ஆகா, பயிர் அழகாக உள்ளதே!

4. அடப்பாவமே அப்படின்னா நாம எதைத்தான் சாப்பிடுவது

அடப்பாவமே! அப்படின்னா, நாம எதைத்தான் சாப்பிடுவது?

## எ. படத்தைப் பார்த்து விடுகதைகள் உருவாக்குக

1.  ஒரு வீட்டுக்கு இரண்டு வாசற்படி அது என்ன? மூக்கு

2.  பெட்டியைத் திறந்தால் வெள்ளை முத்துக்கள் அது என்ன ?

AKSHAYA ACADEMY MATRIC Hr. Sec. SCHOOL
KOSAVAPATTY
KNOWLEDGE IS POWER